[1983 சனவரி 27

திரு என். சங்கரய்யா: இது மிகவும் மோசமான விஷயம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் ஒரு பிரச்சினையை இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். இங்கே உள்ள பத்து அடுக்கு மாளிகையில் இரண்டு தூக்கிகள் இருக்கின்றன. இரண்டையும் சாதாரணமாகப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். முக்கியமான மாநாடோ மற்றவைகளோ நடைபெறுமானால் அந்த மாநாட்டிலே முக்கியமானவர்கள் எல்லாம் கலந்து கொள்கிறபோது ஒரு லிப்டை அவர்களுக்கு என்று ஒதுக்கிவிட்டு மற்றொரு லிப்டை அந்தப் பல்லடுக்கு மாளிகையிலே பணியாற்றுகிற பல்வேறு அதிகாரிகளும் அலுவலர்களும் பயன் படுத்த வேண்டுமென்ற ஒரு முறை வகுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த வகையிலே ஏதேனும் ஒரு மாநாடு நடைபெறுகிற போது ஒன்றை அதற்கென்று தனியாக ஒதுக்கிவைப்பது உண்டு. ஆனால் எம். எல். ஏ.க்களைப் பொறுத்தவரையிலும் அவர்களைத் தடுத்து நிறுத்தினார்கள் என்று சொல்வது உள்ளபடியே வருந்த வேண்டிய ஒன்று. வி. ஐ. பி.யைத் தான் அனுமதிப்போம், இல்ல விட்டால் இல்லை என்று சொன்னதாக சொன்னார்கள். அவர்கள் நாங்கள் வி. ஐ. பி. இல்லையா என்றார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் வி. ஐ. பி.க்கள் அல்ல, வி. வி. ஐ. பி.க்கள்தான். 'வெரி இம்பார்ட்டன்ட் பெர்சன் அல்ல' 'வெரி வெரி இம்பார்ட்டன்ட் பெர்சன்' என்று கருதப்பட வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரைக்கும் அதிகாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் இந்த அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அவர்களுக்கு எல்லாம், அலுவலகத்திற்கு வந்தாலும், அவரவர்களுடைய அலுவலகங்களுக்கு வந்தாலும் அதிகாரிகளை, மற்றைய அலுவலர்களை சட்டமன்ற உறுப்பினர்கள் பார்க்கவந்தாலும் அவர்களுக்கு எல்லாம் உரிய மரியாதை கொடுக்கவேண்டுமென்று தனியாக ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்களுக்கு அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது என்றால் அது வருந்தத்தக்க ஒன்று. அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடை பெறாமல் இருப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அதை அரசு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(உ) கவன ஈர்ப்பு அறிவிக்கைகள்

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் போன்றவைகள் கொடுக்கிறபோது அதைத் தாங்கள் மறுத்தாலும் கூட அதை சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும் துறைகளுக்கும் நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கிறீர்கள். அதே நடைமுறையை கவன ஈர்ப்புக்கும் அமல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.